## ஒதுக்கீட்டுத் தலைப்பு 119 - மின்வலு, எரி சக்தி அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2011 ஆம் ஆண்டு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மின்வலு, எரி சக்தி அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 ஒக்டோபர் 31 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடு திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 36,259 மில்லியனானதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 26,195 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்புகள் ரூபா 10,064 ஆனதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டின் 28% ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| செலவின விபரம் | மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 1,409,990 | 895,601 | 215,428 | 24 |
| மூலதனம் | 32,704,650 | 35,363,215 | 9,848,659 | 28 |
| கூட்டுத்தொகை | 34,114,640 | 36,258,816 | 10,064,087 | |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

11901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான மீதிகளும் பின்வருமாறாகும்.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 5,800,000 | 2,240,282 | 2,500,000 | 3,053,432 | 31,000,000 | 12,558,610 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கில் ரூபா 16,130,664 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,461,534 ஆனதுடன் இது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **கணக்கு இல.** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| 6000-0000-00-0003-0034 | 12,882,241 |
| 6000-0000-00-0015-0032 | 579,293 |
| கூட்டுத்தொகை | 13,461,534 |

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மின்வலு, எரி சக்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.5 முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 08 செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,555 மில்லியன் தொகையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முற்பணக் கொடுப்பனவுகளின் தாமதம் மற்றும் கொள்வனவு நடைமுறைகளிலேற்பட்ட தாமதம் காரணமாக அந்த முழு ஏற்பாடும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது.

**(ஆ) கூட்டுத்திட்டம்**

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அதனை அடுத்துள்ள 3 ஆண்டுகள் பூர்த்திசெய்யப்படும் வகையில் தயாரிக்கப்பட வேண்டிய கூட்டுத்திட்டம் அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மின்வலு, எரி சக்தி அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பாக 2012 செப்தெம்பர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவில் கலந்து கொண்ட நிதி அமைச்சின் பிரதிநிதியால் வரிசை அமைச்சிற்காக கூட்டுத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாததாக இது வரையில் நிதி அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் அவ் அறிவுறுத்தல் மிகவும் விரைவாகச் சுற்றறிக்கையின் மூலம் சகல அமைச்சிற்கும் அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். அக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு குழுவின் உடன்பாடு கிடைக்கப்பெற்றமையால் இதன் பிரகாரம் அவ் அமைச்சிற்காக கூட்டுத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமை அமைச்சுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

2011 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கான செயற்பாட்டுத்திட்டம் ஒன்று 2012 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

11901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்தினத்திலான அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 865,393 தொகையானதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஓர் உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் மீதி முற்றாகத் தீர்த்துவைக்கப்படாது சம்பளமற்ற வெளிநாட்டு லீவு அங்கீகரிகப்படலாகாது என தாமனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.18.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக ரூபா 16,375 தொகையான கடன் மீதியை அறவிட வேண்டியிருந்த ஓர்

உத்தியோகத்தருக்கு 1992 ஆம் ஆண்டின் போது சம்பளமற்ற வெளிநாட்டு லீவு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அக் கடன் மீதி 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறும் அறவிடப்பட முடியாதிருந்தது.

(ii) சேவையை விட்டு விலகிய 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 188,470 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்காக அமைச்சு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| நிதிப் பிரமாணம் | | |
| (i) நி.பி. 104 | 927,455 | 11 வாகன விபத்துக்களுக்கு உரித்தாக ஏற்கப்பட்ட ரூபா 1,534,166 தொகையான நட்டத்தில் ரூபா 606,711 தொகை காப்புறுதிக் காப்பிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 927,455 தொகையான சேமிப்பு திறைசேரி அங்கீகாரமின்றியும் போதிய காரணங்கள் காண்பிக்கப்படாமலும் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன. |
| (ii) நி.பி. 625(அ) | 200,000,000 | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் கீழ் கொரிய அரசாங்கத்தால் பொருள் |

நன்கொடையிலிருந்து செயற்பட்ட அம்பாந்தோட்டை சூரிய சக்தி செயற்திட்டத்திற்காகவும் வருடாந்த மதிப்பீடு ஏற்பாடு செய்யப்பட்டிராததுடன் 2011 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 200 மில் அளவான நன்கொடைகளின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

## 2.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஜீப் வண்டியின் இயந்திரன் வெப்பத்தை அதிகரிப்பைக் காண்பித்திருந்த போதிலும் 2007 யூலை 01 ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகம் வரை தொடர்ந்து வாகனம் ஓடிய காரணத்தினால் பாதிப்பிற்குள்ளான இயந்திரத்தைப் பழுதுபார்க்கப்படுவதற்காக அமைச்சு ரூபா 473,880 தொகையான நட்டத்தை ஏற்படுத்துவது தொடர்பாக நி.பி. 102, 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 யூன் 03 ஆம் திகதி அமைச்சிற்கு உரித்தான ஓர் மோட்டார் வாகனம் பஸ் வண்டியுடன் மோதியமையால் ஏற்பட்ட ரூபா 407,880 தொகையான நட்டத்தில் ரூபா 310,142 தொகை அமைச்சிற்கு காப்புறுதியின் மூலம் பெறப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 97,738 தொடர்பாக நி.பி. 104 இன் பிரகாரம் செயற்படுவதற்கு உள்ளகக் கணக்காய்வாளரின் பங்கேற்புடன் ஓர் குழுவை நியமிப்பதற்கு 04 ஆண்டுகளின் பின்னர் தீர்மானம் எடுக்கப்பட்டு வேறு காப்புறுதி நிறுவகத்திலிருந்து எஞ்சிய நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்குத் தீர்மானித்திருந்தமையும் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 18 | 16* | 02 |
| (ii) இரண்டாம் நிலை | 49 | 41 | 08 |
| (iii) ஆரம்ப நிலை | 47 | 40 | 07 |
| மொத்தம் | 114 | 97 | 17 |

* அமைச்சரவை அங்கீகாரத்தில் இலங்கை மின்சார சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களால் நிரப்பப்பட்ட மேலதிகச் செயலாளர் (தொழிநுட்ப) பதவிகள் மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் நிரப்பப்பட்ட மேலதிக செயலாளர் (திட்ட மற்றும் அபிவிருத்தி) பதவி இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்**

அமைச்சினால் முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள் தொடர்பாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி (பெற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு) |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 01 | இலங்கை மின்சார சபை | 2008 |
| நிறைவேற்றுத்தரமல்லாத | 01 | இலங்கை மின்சார சபை | 1994 |
| கனிஷ்ட தரம் | 01 | மேற்படி | 2003 |
| நிறைவேற்றுத்தரமல்லாத | 02 | மேற்படி | 2008 |
| கனிஷ்ட தரம் | 03 | மேற்படி | 2009 |
| நிறைவேற்றுத்தரமல்லாத | 02 | மேற்படி | 2010 |
| கனிஷ்ட தரம் | 03 | மேற்படி | 2010 |

| | | | |
|---|---|---|---|
| மேற்படி | 01 | மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை | 2010 |
| நிறைவேற்றுத்தரமல்லாத | 01 | இலங்கை மின்சார சபை | 2011 |
| கனிஷ்ட தரம் | 07 | மேற்படி | 2011 |
| | ----------- | | |
| | 22 | | |
| | ===== | | |

(i) முறையான அங்கீகாரம் இன்றி அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்திக்குரிய சாரதிகளின் 2010 ஒக்டோபர் முதல் 2011 திசெம்பர் வரையான சம்பளங்கள் மற்றும் படிப்பணங்கள், மேலதிக, போக்குவரத்துச் செலவினங்கள் உள்ளடங்கலாக மொத்த ஊதியமான ரூபா 745,278 மின்சார சபையிலிருந்து மகாவலி அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் நல்ஆளுகை தொடர்பான வழிகாட்டிக் கைநூலின் 9.4 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அமைச்சு அமைச்சரவை அங்கீகாரமின்றி முறையே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு உத்தியோகத்தரையும் இலங்கை மின்சார சபையின் 21 உத்தியோகத்தர்களையும் அமைச்சின் சேவைகளுக்காக ஈடுபடுத்தியிருந்தது. இலங்கை மின்சார சபையின் 21 பேரில் 8 பேரும் 2011 ஆம் ஆண்டின் போது புதிய நியமனங்கள் பெற்று அந்நாள் முதல் அமைச்சிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறு அமைச்சிற்கு ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக 2011 திசெம்பர் மாதம் மாத்திரம் மின்சார சபையால் ஏற்கப்பட்ட ஊதியப் பெறுமதி ரூபா 1,047,878 ஆகக் காணப்பட்டது.

## 2.8 உள்ளகக் கட்டுப்பாடு

### முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு செயற்படுத்தல்

கடந்த நான்கு ஆண்டுகளின் போது முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு திருப்திகரமாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.